# மக்கள் தொகை கணக்கெடுப்பு நாள், 7 மார்ச் 2023.

## 2023 மக்கள் தொகை கணக்கெடுப்பு நம் அனைவரையும் உள்ளடக்குகிறது.



**Te Kāwanatanga o Aotearoa**
New Zealand Government

Census | Stats NZ

**Tatau tātou - All of us count**

TAMIL

# மக்கள் தொகை கணக்கெடுப்பில் நாம் அனைவரும் பங்கேற்கும்போது, அனைவரும் முக்கிய பங்கு வகிக்கிறோம்.

கணக்கெடுப்பு என்பது ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நாடுதழுவிய அளவில் எடுக்கப்படும் கணிப்பாகும். இது ஆட்டேரோவா நியூசிலாந்திலுள்ள ஒவ்வொரு நபரின் தலை எண்ணிக்கை மற்றும் அவர்கள் வசிக்கும் அல்லது தங்கியுள்ள (வசிப்பிடங்கள்) இடங்களை பற்றிய விவரங்களை உள்ளடக்கும் அதிகாரபூர்வ கணக்கெடுப்பாகும்.

ஆட்டேரோவா நியூசிலாந்து காலப்போக்கில் எத்தகைய மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள இந்த கணக்கெடுப்பு உதவும். இது iwi, சமூகக் குழுக்கள் மற்றும் அரசு ஆகியன மருத்துவமனைகள், பள்ளிகள் மற்றும் பொதுப் போக்குவரத்து போன்ற, மக்கள் மற்றும் சமூக அங்கங்களுக்கான சேவைகளை திட்டமிட உதவுகிறது.

கணக்கெடுப்பு தினமான **7 செவ்வாய்க்கிழமை மார்ச் 2023** அன்று ஆட்டேரோவா நியூசிலாந்தில் இருக்கும் ஒவ்வொரு நபரும் இந்த கணக்கெடுப்பில் பங்கேற்க வேண்டும். நீங்கள் கணக்கெடுப்பை ஆன்லைனிலோ காகிதத்திலோ பூர்த்தி செய்யலாம்.

ஸ்டேட்ஸ் NZ உங்கள் விவரங்களையும் அடையாளத்தையும் பாதுகாக்கும். நாங்கள் பதிப்பிக்கும் விவரங்களிலிருந்து நீங்கள் இனம் கண்டறியப்பட மாட்டீர்கள் என்பதை நாங்கள் உறுதிபடுத்துகிறோம்.

நீங்கள் எங்களுடன் பகிரும் எவ்வித தனிப்பட்ட விவரங்களையும் நாங்கள் யாருடனும் பகிர மாட்டோம், எடுத்துக்காட்டாக, வொர்க் அண்ட் இன்கம், Kāinga Ora, காவல் அல்லது நியூசிலாந்து குடியேற்ற துறைகள் போன்ற அரசாங்க நிறுவனங்களுடன்.

மேலும் தகவலுக்கு **www.census.govt.nz** என்ற வலைதளத்திற்கு வருகை தரவும்.
இலவச தொலைபேசி **0800 CENSUS (0800 236 787)**, பிப்ரவரி **6** அன்று செயலில் இருக்கும்.